# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2005 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, கப்றுக்க நிதியச் சட்டம்

*(2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2005, செத்தெம்பர் மாதம் 23 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 18.25** **தபாற் செலவு : ரூபா 7.50**

## 2005 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, கப்றுக்க நிதியச் சட்டம்

[2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது ]

ச. வ. ஒ. 60/2004

**"கப்றுக்க நிதியம்" என அழைக்கப்படும் நிதியம் ஒன்றைத் தாபிப்பதற்கும் அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும், கப்றுக்க சங்கங்களைப் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டமானது, 2005 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, கப்றுக்க நிதியச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

பாகம் I

### கப்றுக்க நிதியத்தைத் தாபித்தல்

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கப்றுக்க நிதியம் என அழைக்கப்படவேண்டிய நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். கப்றுக்க நிதியத்தைத் தாபித்தல்.

(2) நிதியமானது, இப்பிரிவின் ஓராம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினை ஒன்றும் கொண்டதாயிருத்தலும் வேண்டும் அத்துடன் அத்தகைய பெயர் கொண்டு அது வழக்குத் தொடரலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

**3.** (1) நிதியத்தின் நிர்வாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக அமைக் கப்படும் முகாமைச் சபைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும். நிதியத்தின் முகாமைச் சபையை அமைத்தல்.

2 – PL 000491 – 1,250 (2005/ 07)

(2) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) நிதியத்தின் முகாமைச்சபை பின்வரும் உறுப்பினரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் தவிசாளர் ;

(ஆ) தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் ;

(இ) தெங்கு ஆராய்ச்சி சபையின் தவிசாளர் ;

(ஈ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பொதுமுகாமையாளர், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி அத்துடன் தெங்கு ஆராச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் ;

(உ) பெருந்தோட்ட அமைச்சிலிருந்து அமைச்சரால் நியமிக்கப்படும் அலுவலரொருவர் ;

(ஊ) தெங்குக் கைத்தொழில் சிறப்புத்தேர்ச்சியைப் பெற்றிருக்கின்ற ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர் ; அத்துடன்

(எ) கப்றுக்க சமித்தியின் இலங்கைச் சம்மேளனத்தின் தலைவர் மற்றும் சம்மேளனத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதிகள் நால்வர்.

சபையின் தவிசாளர்.

**4.** (1) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் தவிசாளர் முகாமைச் சபையின் பதவிவழித் தவிசாளராதல் வேண்டும்.

(2) ஐந்தாம் பிரிவின் (ஆ) பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய சபையின் தவிசாளர் பதவிக்காலம் சபையின் உறுப்பாண்மைக் காலமாக இருக்க வேண்டும்.

(3) நிதியத்தின் மொத்த உறுப்பாண்மை பதினான்காதல் வேண்டும்.

**5.** (அ) மூன்றாம் பிரிவின் இரண்டாம் உட்பிரிவின் பந்தி (உ) மற்றும் (எ) இன் கீழ் நியமிக்கப்பட்ட சபையின் தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு அதன் சார்பில் முகவரியிட்ட கடிதத்தின்மூலம் தவிசாளர் அல்லது உறுப்பினரின் பதவி யிலிருந்து விலகலாம். தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் பதவி விலகல் மற்றும் பதவி அகற்றல்.

(ஆ) அமைச்சரானவர் சபையின் தவிசாளர் அல்லது உறுப் பினரை குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக தவிசாளர் அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றலாம்.

**6.** இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட "கப்றுக்க சமித்தியின்" உறுப்பினர்கள் மற்றும் அலுவல்கள் நிதியத்தின் உறுப்பாண் மைக்கு உரித்துடையவராதல் வேண்டும். நிதியத்தின் உறுப்பாண்மை.

**7.** (1) சபையின் தவிசாளர், சபையின் ஒவ்வொரு கூட்டத் திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத் திற்குத் தவிசாளர் வருகைதராவிடின் வருகைதந்த உறுப்பினர் களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் எவரேனும் அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் கூட்டங்கள்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் பிரிவு 3 இன் 2 ஆம் உட்பிரிவின் பந்தி (அ), (ஆ), (இ) அத்துடன் (உ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் உள்ளடங்கலாக ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) சபையானது இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூட்டங்களை மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்கள் கையாளப்படுவது தொடர்பிலான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

**8.** சபையினது செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தின் அல்லது அதன் உறுப்பினர் களிடையே வெற்றிடம் அல்லது குறைபாடு உள்ளதென்ற காரணத் திற்காக மட்டும் வலிதற்றதாகக் கருதப்படுதல் ஆகாது. உறுப்பினர்கள் மத்தியில் வெற்றிடம் இருத்தல் சபையின் செயல்களை அல்லது நடவடிக் கைகளைச் செல்லுபடி யற்றதாக ஆக்காதிருத்தல்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

**9.** (1) (அ) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட சபையின் ஒவ்வொரு உறுப்பினரும், அவர் ஏற்கனவே பதவியிலிருந்து அகற்றப்பட்டால் அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்கினாலன்றி அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட காலத்திற்ககுப் பதவி வகித்தல் வேண்டும்.

(ஆ) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் ஒவ்வொரு வரும் அவர் ஏற்கனவே பதவியிலிருந்து அகற்றப்பட்டால் அல்லது வேறுவகையில், பதவியை வறிதாக்கினாலன்றி அவரது நியமனத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) சபையின் பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் எப்பதவியை வகிக்கின்றார் என்பதன் பயனாக சபையின் உறுப் பினர் ஒருவராக இருக்கின்றாரோ அப்பதவியை வகிக்கின்ற காலப் பகுதிவரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) அல்லது (எ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் ஒருவர் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக அமைச்சரால் பதவியிலிருந்து அகற்றப்பட்டால் அல்லது அமைச்சருக்கு முகவரி யிடப்பட்ட கடிதத்தின்மூலம் பதவியிலிருந்து அவர் விலகினால் பதவியை வறிதாக்கல் வேண்டும்.

(4) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) அல்லது (எ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட சபையின் எவரேனும் உறுப்பினர் இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படல் மூலம் பதவியை வறிதாக்குமிடத்து அமைச்சரான வர் அப்பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினர் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறொரு ஆளை அமைச்சர் நியமித்தல் வேண்டும் அத்துடன் அவ்வாறாக நியமிக் கப்பட்ட ஆள் பதவியில் அவருக்கு முன் பதவி வகித்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியிருக்கும் பதவிக்காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(5) பதவியிலிருந்து அகற்றல் மூலம் தவிர வேறுவகையில் பதவியை வறிதாக்கும் சபையின் எவரேனும் உறுப்பினர் மீள நியமனத்துக்குத் தகுதியுடையவராவார்.

*(6) சபையின் உறுப்பினர் ஒருவர் உடல் நலமின்மை, இலங்கையில் இல்லாமை அல்லது வேறேதேனும் காரணம் என்பவற்றுக்காக தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து அமைச்சரானவர் அவருக்குப் பதிலாக செயலாற்றுவதற்காக அவரின் இடத்திற்கு வேறொரு ஆளை நியமிக்கலாம்.*

*நிதியத்தின் இலச்சினை.*

**10.** *(1) நிதியமானது பொது இலச்சினை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அப்பொழுது இலச்சினையானது சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளினது கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.*

*(2) நிதியத்தின் இலச்சினையானது, சபையால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.*

*(3) நிதியத்தின் இலச்சினையானது சபை உறுப்பினர்கள் இருவர் சமூகத்திலன்றி, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன் சமுகமாயிருந்த சபையின் உறுப்பினர்கள் இருவரும், அவர்கள் சமுகமாயிருந்தார்கள் என்பதற்கடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.*

*(4) சபையானது, நிதியத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட சாதனங்கள் அல்லது ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றினைப் பேணுதல் வேண்டும்.*

*ஒப்பந்தங்களில் உறுப்பினர்கள் தமக்குள்ள அக்கறைகளை வெளிப்படுத்தல் வேண்டுமென்பது.*

**11.** *சபையினால் செய்யப்படவேண்டுமென்று உத்தேசிக்கப்படும் ஒப்பந்தமொன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அக்கறையுள்ளவரான சபை உறுப்பினர் ஒருவர் சபைக் கூட்டம் ஒன்றில் அவருக்குள்ள அக்கறையின் தன்மையினை வெளிப்படுத்தல் வேண்டும். அவ்வெளிப்படுத்துகையானது சபையின் கூட்டக் குறிப்புகளில் பதிவுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒப்பந்தம் தொடர்பாக சபையானது மேற்கொள்ளும் தீர்க்காலோசனை எதிலும் அல்லது தீர்மானம் எதிலும் அத்தகைய உறுப்பினர் கலந்துகொள்ளுதலுமாகாது.*

உறுப்பினர்களுக்கு ஊதியமளித்தல்.

**12.** அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் தீர்மானிக்கக்கூடியதான அத்தகைய முறையிலும், அத்தகைய வீதங்களிலும் சபை உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### நிதியத்தின் குறிக்கோள்கள்

நிதியத்தின் குறிக்கோள்கள்.

**13.** நிதியத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும்.

(அ) தெங்கு சிறுபற்று நிலங்கள் சொந்தக்காரரிடம் சேமிப்புப் பழக்கத்தைப் புகட்டுதலும் மேம்படுத்தலும் அவர்களின் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தை உயர்த்துதலும் ;

(ஆ) பொருத்தமான விஞ்ஞான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன்மூலம் தெங்கு உற்பத்திகளை அதிகரிப்பதற்கும், அவர்களுடைய சிறுபற்று நிலங்களில் கமத்தொழில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் அவர்களுடைய தெங்கு சிறுபற்று நிலங்களில் கிடைக்கும் இலாபங்களை அதிகரிப்பதற்கும் தெங்கு சிறுபற்றுநிலச் சொந்தக்காரர்களுக்கு உதவுதல் ;

(இ) தெங்கு அடிப்படையிலான சிறிய கைத்தொழிலின் தாபிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான பொருத்தமான முதலீடுகளை மேம்படுத்தல் ;

(ஈ) தெங்கு பதனிடல் அலகுகள், தெங்குத் தொழிற்சாலைகள் மற்றும் அத்தகைய தெங்கு சிறுபற்றுநிலங்களின் விளைபொருளின் தயாரிப்புக்குத் தேவைப்படுகின்ற வேறு வசதிகள் என்பவற்றைக் கொள்ளுதல், அபிவிருத்தி செய்தல் அல்லது தாபித்தல் ;

(உ) (இச்சட்டத்தின் "கப்றுக்க சமித்தி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தெங்கு சிறுபற்று நிலங்கள் அபிவிருத்திச் சங்கங்களையும் தெங்கு அடிப்படையிலான சிறிய கைத்தொழில்களையும் பதிவுசெய்தலும் ஒழுங்குபடுத்துதலும் அத்துடன் நிதியத்துடன் பதிவுசெய்யப்பட்டுள்ள அத்தகைய சமித்தியின் உறுப்பினர்களுக்கு உதவிவழங்குதலும் ;

(ஊ) அத்தகைய தென்னை பதனிடல் அலகுகளின் அல்லது தொழிற்சாலைகளின் விளைபொருட்களைச் சந்தைப் படுத்துவதனை மேம்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும் ;

(எ) சிறுபற்று நிலங்களிலும் சிறிய கைத்தொழிலிலும் தெங்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களின் மேம்பாட்டுக்கும் நலனுக்கும் கப்றுக்க சமித்திக்கு உதவுதல்.

நிதியத்தின் தத்துவங்கள்.

**14.** (1) சபையானது நிதியத்தின் குறிக்கோள்களைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமான அல்லது உசியதமான அல்லது இடைநேர்விளைவான எல்லா நடவடிக்கைகளையும் நிதியத்தின் பெயரில் எடுப்பதற்குத் தத்துவங்கொண்டதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி சபையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) எவரேனும் அலுவலருக்கூடாக அல்லது சபையினால் அதன் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கூடாக நேரடியாகவாயினுஞ்சரி மறைமுகமாயினுஞ்சரி நிதியத்தின் குறிக்கோள்களைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் அல்லது கொண்டுநடாத்துவதற்கும் ;

(ஆ) நிதியத்தின் குறிக்கோள்களைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமான ஏதேனும் வியாபாரப்பொருள், உபகரணம் அல்லது இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு, அனுப்புவதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு, வழங்குவதற்கு அத்துடன் பேணுவதற்கும் ;

(இ) நிதியத்தின் குறிக்கோள்களைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் முகவர்களையும் நியமிப்பதற்கு, தொழிலுக்கு அமர்த்துவதற்கு, ஊதியமளிப்பதற்கு அத்துடன் அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் ;

(ஈ) தெங்கு சிறுபற்றுநிலச் சொந்தக்காரர்களின் நன்மைக்காக ஓய்வூதிய அல்லது சகாய நிதித்திட்டங்களைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் அத்துடன் ஏதேனும் இடர்களுக்கு எதிராக நிதியத்தின் உறுப்பினர்களை காப்புறுதி செய்வதற்கும் ;

(உ) நிதியத்தின் உறுப்பினர்களையும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் பயிற்றுவிப்பதற்கும் ;

(ஊ) நிதியத்தின் குறிக்கோள்களை கொண்டுநடாத்துவதற்கு வங்கிக் கணக்குகளை திறக்கவும், செயற்படுத்தவும், மூடிவிடவும் ;

(எ) நிதியத்தால் புரியப்பட்ட சேவைகளுக்காக அல்லது நிதியத்தால் வழங்கப்பட்ட வசதிகள் அல்லது உபகரணத்திற்காக கட்டணங்களை அல்லது வேறு விதிப்பனவுகளை அறவிடுவதற்கு ;

(ஏ) தேங்காய் அல்லது தெங்கு உற்பத்திகளின் பதனிடலில் ஈடுபட்டுள்ள இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் கப்றுக்க சமித்திக்கு கடன்கள் வாயிலாக அல்லது மானியங்கள் வாயிலாக நிதிய உதவி உட்பட உதவியை வழங்குவதற்கு ;

(ஐ) நிதியத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படுத்தப்படாததான நிதியத்தின் அத்தகைய பணங்களை சபை பொருத்தமானதென்று கருதக்கூடியதான அத்தகைய பிணைப்பொறுப்புகளின் முதலிடுவதற்கு ;

(ஒ) (i) *நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான ஏதேனும் விடயம் தொடர்பில் சபையினரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அத்தகைய விபரங்களைக்கொண்ட உண்மையானதும் சரியானதுமான பதிவேடுகளைப் பராமரிப்பதற்கு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தல் ;*

(ii) *நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான ஏதேனும் விடயம் தொடர்பில் ஆளின் அறிவுக் கெட்டியவாறான அத்தகைய எல்லா விபரத் திரட்டுகள் தகவல்கள் மற்றும், விளக்கங்கள் என்பவற்றைக் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியினுள் கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தல் ;*

(iii) *முதலாம் உட்பந்தியின்கீழ் பராமரிக்கப்படும் ஏதேனும் பதிவேட்டில் பதியப்பட்ட அல்லது* (ii) *ஆம் உட்பந்தியின்கீழ் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில், தகவலில் அல்லது விளக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் நிகழ்வுகளைச் சரிபார்க்கும் நோக்கத்திற்காக சபையினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய ஆவணம் அல்லது வேறு சான்றை குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு, சமர்ப்பிக்கப்படச் செய்வதற்கு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தல் ;*

(iv) *முதலாம் உட்பந்தியின்கீழ் பராமரிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் பதிவேடுகளைப் பரிசோதித்துச் சரிபார்க்கும் நோக்கத்திற்காக அல்லது* (ii) *ஆம் அல்லது* (iii) *ஆம் உப பந்தியின்கீழ் சபைக்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திட்டில் அல்லது தகவலில் அல்லது விளக்கத்தில் உள்ளடங்கியுள்ள ஏதேனும் விபரங்*

களைச் சரிபார்க்கும் நோக்கத்திற்காக அல்லது கையிருப்புகளைச் சரிபார்க்கும் நோக்கத்திற்காக அல்லது கையிருப்புகளைப் பரிசோதித்து செவ்வை பார்க் கும் நோக்கத்திற்காக ஏதேனும் காணி, கட்டிடம், அலுவலகம், களஞ்சியம், தொழிற்சாலை, கூடாரம் அல்லது வளவுகள் என்பவற்றில் ஏதே னும் நியாயமான நேரத்தில் பிரவேசித்தலும் பரிசோதித்தலும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (ஒ) எனும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் அல்லது (ii) ஆம் உட்பந்தியில் அல்லது (iii) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளுடன் நியாயாமான காரணமின்றி இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது தெரிந்துகொண்டே ஏதேனும் பொய்யான பதிவேடுகளைப் பராமரிக்கின்ற அல்லது தெரிந்து கொண்டே ஏதேனும் பொய்யான விபரத்திரட்டு, தகவல் விளக்கங்கள் அல்லது ஆணை அல்லது வேறு சான்றுகளைக் கொடுத்துதவுகின்ற அல்லது (2) ஆம் உட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியினால் அதற்கு வழங்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில், சபையைத் தடைசெய்யும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

## பாகம் III

### கப்றுக்க சமித்திகள்

கப்றுக்க சமித்தியின் உறுப்பாண்மை.

**15.** பின்வரும் ஆட்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கப்றுக்க துருசவிய சங்கத்தின் உறுப்பாண்மையைப் பெறுவதற்குத் தகைமையுடையவராகவிருத்தல் வேண்டும் :—

(அ) அத்தகைய சமித்தியின் உத்தேசிக்கப்பட்ட தொழிற் பாட்டு இடப்பரப்பிற்குள் தெங்குக் காணிகளைச் சொந்தமாக வைத்திருக்கின்றவர்களும், 18 வயதை விடக் குறையாதவராக இருக்கின்றவர்களுமான தெங்கு சிறுபற்று நிலச்சொந்தக்காரர்கள் ; அத்துடன்

(ஆ) அவ்விடப்பரப்பினுள் புதிய பெருந்தோட்ட நிலங்களுக் கான அனுமதி வழங்கப்பட்டவர்களான தெங்கு சிறுபற்று நிலச் சொந்தக்காரர்கள் ;

(இ) புதிதாக தாபிக்கப்பட்ட இடப்பரப்பினுள் தற்போது கொண்டு நடாத்துகின்ற தெங்கு அடிப்படையிலான சிறு கைத்தொழில்கள்.

கப்றுக்க சமித்தியின் குறிக்கோள்கள்.

**16.** இச்சட்டத்தின் பதிவு செய்யப்பட்ட கப்றுக்க சமித்தி ஒவ்வொன்றினதும் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் :—

(அ) தமது உற்பத்திக்கான அதி நன்மைகளைப் பெறுவதற்கு கூட்டாகச் செயற்படுதலும் மற்றும் அதன் உறுப்பினர்களிடையே புரிந்துணர்வை உருவாக்குதலும் பேணி வளர்த்தலும் ;

(ஆ) அதன் உறுப்பினர்களிடையே சேமிப்புப் பழக்க வழக்கத்தை பயிற்றுவித்துப் பழக்குதலும் மேம்படுத்துதலும் உறுப்பினர்களிடையே பொருளாதார மற்றும் சமுதாய நிலைமைகளை உயர்த்துதல் ;

(இ) தெங்கு சிறுபற்று நிலச் சொந்தக்காரர்கள், பொருத்தமான விஞ்ஞான தொழிநுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் தெங்கு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அவர்களுடைய சிறுபற்று நிலங்களில் உற்பத்தித் திறன் மற்றும் அவர்களுடைய தெங்கு சிறுபற்று நிலங்களின் இலாபங்களை அதிகரிப்பதற்கும் உதவி வழங்குதல் ;

(ஈ) தெங்குக் கைத்தொழிலுடன் தொடர்புடைய பொருத்தமான முதலீடுளை உயர்த்துதல் ;

(உ) இதன் உறுப்பினர்கள் உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பதற்குத் தேவைப்படும் தெங்கு படிமுறை அலகுகள் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய வசதிகள் என்பவற்றைத் தாபித்தல் அல்லது அபிவிருத்தி செய்வதுடன் அபிவிருத்தி அடையச் செய்தல் ;

(ஊ) அதனது உறுப்பினர்களுக்கு நிதி மற்றும் வேறு உதவிகளுக்கு ஏற்பாடு செய்தல் ;

(எ) தெங்கு அடிப்படையிலான பெறுமதி அதிகரித்த உற்பத்திப் பொருளில் உற்பத்திக்கு வசதியளித்தல் ;

(ஏ) அத்தகைய தெங்கு படிமுறை அலகுகள் அல்லது தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதலை மேம்படுத்துதலும், அபிவிருத்தி செய்தலும் ;

(ஐ) அதன் உறுப்பினர்களின் மேம்பாட்டிற்கும் நலனிற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல்.

கப்றுக்க சமித்தியைப் பதிவு செய்தல்.

**17.** (1) கப்றுக்க சமித்தியொன்றானது, ஒழுங்குவிதிமூலம் விதித்துரைக்கப்பட்ட முறையில், அதற்கான விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்வதற்காக சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் அவற்றுக்கிணங்கவும் பதிவுசெய்யப்பட்ட கப்றுக்க சமித்தியானது இச்சட்டத்தின் கீழ் எந்தப்பெயரின்கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதோ அப்பெயருடனான இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கப்றுக்க சமித்தி ஒவ்வொன்றும் அத்தகைய சங்கம் தீர்மானிக்கக்கூடியாவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருக்கவேண்டியதான பொது இலச்சினை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) (அ) இச்சட்டத்தின்கீழ் கப்றுக்க சமித்தி ஒன்று பதிவுசெய்யப்பட்டதன்மேல் சபையானது, இடாப்பில் குறித்தொதுக்கப்பட்ட பெயரில் கப்றுக்க சமித்தி என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது எனக் கூறுவதும் அத்தகைய கப்றுக்க சமித்தி அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட திகதியைக் கூறுவதுமான அறிவித்தலொன்றைக் கசெற்றில் வெளியிடப்படச் செய்வித்தல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட கப்றுக்க சமித்தி ஒன்றின் பதிவொன்று செய்யப்பட்டதன்மேல் அத்தகைய சமித்தியின் பதிவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது எனக் கூறும் அறிவித்தல் ஒன்றை கசெற்றில் சபையானது வெளியிடச் செய்வித்தலும் வேண்டும்.

## பாகம் IV

### நிதியும் பணியாட்டொகுதியும்

**18.** இந்நிதியத்துள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :— *நிதியத்திற்குச் செலுத்தப்படும் கொடுப் பனவுகள்.*

(அ) நிதியத்தின் பயன்பாட்டிற்கென காலத்துக்குக் காலம் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) அதன் தத்துவங்கள் கடமைகளைப் பிரயோகித்தலில், நிறைவேற்றுதலின் நிதியத்தினால் பெற்றுக்கொள்ளக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

**19.** இந்நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் — *நிதியத்திலிருந்து செலுத்தப்படும் கொடுப்பனவுகள்.*

(அ) நிதியத்தைத் தொழிற்படுத்தல் அல்லது பராமரித்தல் ஆகியவற்றில் சபையால் உறப்படும் ஏதேனும் செலவினத்தை கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையானவாறான அத்தகைய பணத்தொகைகள் ;

(ஆ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமானதெனச் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றதான மற்றும் நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமென இச்சட்டத்தினால் வேண்டப்படுகின்றதான அத்தகைய கொடுப்பனவுகள் என்பவற்றை செலுத்துவதற்கு வேண்டப்படுகின்றதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) இச்சட்டம் தொடங்கிய திகதியன்று உளதாயிருந்த கப்றுக்க கருத்திட்டத்தின் பொறுப்புகளைத் தீர்ப்பதற்கு அவசியமாகத் தேவைப்படுகின்றதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

**20.** இச்சட்டத்தின் தொடக்கத் திகதியில் உள்ளதான கப்றுக்க கருத்திட்டத்தின் எல்லா அசையும், அசையா ஆதனங்களும் அத்தகைய திகதியிலிருந்து நிதியத்தில் உரித்தாக்கப்படுதல் வேண்டும். *சொத்துக்கள் கொள்ளல்.*

கணக்குகளும் கணக்காய்வும்.

**21.** (1) சபையானது அதன் வருமானம் மற்றும் செலவினம் அதன் சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் நிதியத்தின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய செம்மையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக் காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை யின் ஏற்பாடுகள் நிதியத்தின் கணக்காய்விற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினக்கணக்கு மற்றும் ஐந்தொகை சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒன்றின் மூலம் ஒப்பமிட அதிகாரமளிக்கப்பட்ட சபையின் இரு உறுப்பினர் களால் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

நிதியாண்டு.

**22.** சபையின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

நிதியத்தின் பணியாட் டொகுதிக்கு அலுவலர்களை நியமித்தல்.

**23.** (1) சபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் அவ்வலுவலரினதும், பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச் சுச் செயலாளரினதும் அந்த அலுவலர் எந்த அமைச்சுச் செயலா ளரின் கீழ் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளாரோ அந்தச் செயலாள ரினதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மதத்துடன் சபையி னால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிதியத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட லாம் அல்லது அதனையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையில், அலுவலர் ஒருவர் நிதியத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 14 இன் உட்பிரிவு (2) இன் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அவருக்கும் அத்துடன் அவர் தொடர்பாகவும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையில், அலுவலர் ஒருவர் நிதியத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்துக்கு, சட்டத்தின் பிரிவு 14 இன் உட்பிரிவு 3 இன் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அத்துடன் அவர் தொடர்பாகவும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(4) சபையானது ஒரு விதித்துரைக்கப்பட்ட காலத்துக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்ற உடன்பட்டு, ஒப்பந்தமொன்றை அரசாங்கத்துடன் செய்துள்ள ஆளொருவரைத் தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால், நிதியத்துக்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக் காலம் அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாட்டைத் தீர்க்கும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கு ஆற்றப்படும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் V

## பொது

**24.** (1) சபையானது அதன் தத்துவங்களுள் எதனையும் நிதியத்தின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது எவரேனும் அலுவலர், சேவையாளருக்குக் கையளிக்கலாம். *சபையின் தத்துவங்களைக் கையளித்தல்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தத்துவம் எவ்வுறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கப்பட்டுள்ளதோ அவ்வுறுப்பினர் அல்லது அலுவலர் அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும் சபையின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய தத்துவத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

**25.** சபையானது அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அமைச்சரால் வழங்கப்பட்ட ஏதேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். *சபையானது அமைச்சரின் பணிப்புக்கு அமைதல் வேண்டும்.*

*இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் பேரில் எடுக்கப்படும் பணிப்புக்கான நடவடிக்கைக் கான பாதுகாப்பு.*

**26.** (1) வழக்கு அல்லது குற்ற வழக்கு எதுவும் :–

(அ) சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக சபைக்கு எதிராகவும் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின் பேரில் சபையின் எவரேனும் உறுப்பினரால் அல்லது முகவரால் அல்லது நிதியத்தின் எவரேனும் அலுவல ரால் அல்லது சேவையாளரினால் நல்லெண்ணத் துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கு எதிராகவும்

தொடரப்படுதல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் சபையால் அல்லது சபைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கின் அல்லது குற்ற வழக்கில் சபையால் உறப்பட்ட ஏதேனும் செலவுகள் நிதியத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் வழக்கில் அல்லது குற்ற வழக்கில் சபைக்குச் செலுத்தப் பட்ட அல்லது சபையால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுத் தொகைகள் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையினது பணிப்பின் மீது ஓராம் உட்பிரிவில் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டவாறான அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்ற வழக்கில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயலானது நன்னோக்கத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினால் நிதியத்தினால் அத்தகைய ஆளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலொழிய நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**27.** ஆளுக்கு எதிரான அல்லது ஆதனத்திற்கு எதிரான எழுத்தாணை எதுவும் நிதியத்திற்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக வழங்கப்படுதாலாகாது.

*சபை உறுப்பினர் ஒருவரான ஆளுக்கு அல்லது அவரின் ஆதனத்துக் கெதிராக எழுத்தானை வழங்கப்படுதலாகாததாதல்.*

**28.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஆளொவ்வொருவரும் நீதிவான் ஒருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மேல், ஆறு மாதங்களுக்கு விஞ்சாத ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவை மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்

*தண்டனை.*

**29.** சபையின் எல்லா உறுப்பினர்களும், நிதியத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சபையின் உறுப்பினர்களும் நிதியத்தின் அலுவலர்களும், சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**30.** நிதியாண்டு அட்டவணைப்படுத்தப்பட்டதொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*நிதியமானது அட்டவணைப் படுத்தப்பட்டதொரு நிறுவனமாகக் கருதப் படுதல் வேண்டுமென்பது.*

**31.** (1) இச்சட்டத்தினால் எக்கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

*ஒழுங்குவிதிகள்.*

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி அமைச்சர் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றினதும் அல்லது எவையேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(அ) நிதியம் மற்றும் நிதிசார் நடவடிக்கைகளின் அலுவல்களின் நிர்வாகம்;

(ஆ) சமித்திகளின் பதிவிற்கான நிபந்தனைகள் ;

(இ) பதிவுசெய்யப்பட்ட சமித்திகளுக்கும் அத்தகைய சமித்திகளின் நிர்வாகக் குழுவுக்குமாக உப சட்டங்களை ஆக்கல் ;

(ஈ) பதிவை இரத்துச்செய்தல் ;

(உ) சமித்திகளினதும் அதன் குழுக்களினதும் கூட்டங்களை நடாத்தல் ;

(ஊ) பிணக்குகளைத் தீர்ப்பதற்கான நடுத்தீர்ப்பு நடவடிக்கை முறை மற்றும் நடுத்தீர்ப்பாளர் நியமனம் ;

(எ) ஒழித்துக்கட்டுதல் நடவடிக்கைமுறையும் ஒழித்துக் கட்டுதலின் தத்துவங்களும் ;

(ஏ) இச்சட்டத்தால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் எல்லாக் கருமங்களும் ;

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியானது அல்லது அத்தகைய ஒழுங்கு விதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்பு கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாததான ஏதேனும் ஒழுங்குவிதியானது, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்தவாறாக பயனுறுவதாக அதன்கீழ் முன்னர் சொல்லப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் எந்தத் திகதியன்று அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் திகதி பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப் படுதல் வேண்டும்.

**32.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**33.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி -

பொருள் கோடல்.

"தெங்கு மற்றும் தெங்கு அடிப்படையிலான சிறுகைத்தொழில்" என்பது வீட்டு மட்டத்திலான உற்பத்தியின் சிறிய மற்றும் ஒழுங்கற்ற அலகுகள் ;

"தெங்குப் பயிர்ச்செய்கை சபை" என்பது, 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் உருவாக்கப்பட்ட கட்டளையினால் தாபிக்கப் பட்ட தெங்குப்பயிர்ச்செய்கைச் சபை எனப் பொருள்படும்;

"தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை" என்பது 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 24 இன் மூலம் தாபிக்கப்பட்ட தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை எனப் பொருள்படும் ;

"தெங்கு ஆராய்ச்சி சபை" என்பது தெங்கு ஆராய்ச்சி கட்டளைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தெங்கு ஆராய்ச்சி சபை எனப் பொருள்படும் ;

"தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்" என்பது தெங்கு ஆராய்ச்சி கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப் பட்ட தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் எனப் பொருள்படும் ;

"சிறுபற்று நிலங்கள்" என்பது ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட அல்லது ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பைவிட குறைவாகக் கொண்டுள்ளதுமான இடப்பரப்பு எனப் பொருள்கொள்ளப்படுவதுடன் "சிறுபற்று நிலச் சொந் தக்காரர்கள்" என வெளிப்படுத்தும் சொல்லமைப்பு அதற் கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும் ;

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்